அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2022

# தமிழ்

# ஆண்டு 6

| | |
|---|---|
| **நேரம்:** 120 மணித்துளிகள் | **மொத்தப்புள்ளிகள்:** 80<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்:** 04.06.2022 | **பக்கங்கள்:** 12 |

**சுட்டெண்:** | | | | | | | | | | |

## பகுதி 1 - எழுதுதல்

**1. பொருத்தமான விடையின் முன் உள்ள கூட்டினுள் புள்ளடியிடுக.**

1. சார்பெழுத்துகளின் எண்ணிக்கை

☐ முப்பது ☐ பதினெட்டு ☐ இருநூற்றுப்பதினேழு

2. எல்லாள மன்னனின் ஆட்சிக்காலத்தில் ஈழத்தின் தலைநகரம்

☐ வன்னி ☐ கண்டி ☐ அநுராதபுரம்

3. நிகழ்காலத்தைக் காட்டும் வினைச்சொல்

☐ ஓடினான் ☐ ஓடுகிறான் ☐ ஓடுவான்

4. தலை, கண், வாய் போன்றவற்றைக் குறிக்கும் பெயர்ச்சொல்

☐ பொருட்பெயர் ☐ சினைப்பெயர் ☐ குணப்பெயர்

5. வெளியில் இருப்பவனைத் தொட்டால் உள்ளே இருப்பவன் அலறுகிறான். அவன்

☐ அழைப்புமணி ☐ அழிப்பான் ☐ அகப்பை

6. பெயராகவும் வினையாகவும் வரும் சொல்

☐ கை ☐ பை ☐ தை

7. பாற்சோறு என்பதைப் பிரித்து எழுதினால்

☐ பால் + சோறு ☐ பாற் + சோறு ☐ பா + சோறு

8. தொன்றுதொட்டு ஈழம் முழுவதும் பரந்து வாழ்ந்தவர்கள்

☐ போர்த்துக்கேயர் ☐ தமிழர் ☐ ஒல்லாந்தர்

9. குழலி பாட்டுப் பாடி நடனம் ஆடினாள். இச்சொல்லியம்

☐ தனிச்சொல்லியம் ☐ ஏவற்சொல்லியம் ☐ தொடர்ச்சொல்லியம்

10. போர் என்பதன் ஒத்தபொருட் சொல்

☐ உலகம் ☐ சமர் ☐ வெற்றி

11. ஆழிக்குமரன் ஆனந்தன் செய்து முடித்த திறவினைகளின் எண்ணிக்கை

☐ ஒன்பது ☐ ஆறு ☐ ஏழு

12. கதிரவன், நிலவு என்பன

☐ இரு அறம் ☐ இரு சுடர் ☐ இரு திணை

13. அரசன் என்பதன் எதிர்ப்பாற் சொல்

☐ அன்னை ☐ இறைவி ☐ அரசி

14. தன்னை அழித்துப் பிறருக்கு வெளிச்சம் கொடுப்பது

☐ மெழுகுதிரி ☐ மின்சாரம் ☐ கதிரவன்

15. இலையின் காய்ந்த நிலையைக் குறிப்பது

☐ சருகு ☐ கொழுந்து ☐ தளிர்

(15 X 1 = 15 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள சொல்லியங்களின் உறுப்புகளை நிரற்கூட்டில் எழுதுக.**

1. வெண்ணிலா அழகான ஓவியத்தை வரைந்தாள்.
2. நாம் நாள்தோறும் நல்ல நூல்களைப் படிப்போம்.
3. சேந்தன் அரையாண்டுத் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றான்.

| | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

(9 X 1 = 9 புள்ளிகள்)

**3. பொருத்தமான சொல்லை இடைவெளியில் வைத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| உரிமைகளுக்காக | தமிழரது | சீரோடும் சிறப்போடும் |
| அமுதமும் | வாழுதல் | ஒற்றுமையை |

1. இயக்கரும் நாகரும் ______________________ மூதாதையர் ஆவர்.
2. அளவுக்கு மிஞ்சினால் ______________________ நஞ்சு
3. தியாகி திலீபன் தமிழ்மக்களின் ______________________ உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்தார்.
4. விழாக்கள் மாந்தரிடையே ______________________ வளர்க்கும்.
5. எல்லாள மன்னன் நாட்டைச் ______________________ ஆட்சி செய்தார்.
6. சுற்றஞ்சூழ ______________________ தமிழரது பண்பாடுகளுள் ஒன்றாகும்.

(6 x 1 = 6 புள்ளிகள்)

**4. தரப்பட்டுள்ள சொற்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.**

| **ஆங்கிலம்:** | **யேர்மனி:** | **நோர்வே:** |
|---|---|---|
| 1. Crocodile | 1. Krokodil | 1. Krokodille |
| 2. Winter | 2. Winter | 2. Vinter |
| 3. Telephone | 3. Telefon | 3. Telefon |
| 4. Mother tongue | 4. Muttersprache | 4. Morsmål |
| 5. Seashore | 5. Strand | 5. Strand |

**இத்தாலி:**

1. Coccodrillo
2. Inverno
3. Telefono
4. Madrelingua
5. Spiaggia

**நெதர்லாந்து:**

1. Krokodil
2. Winter tijd
3. Telefoon
4. Moedertaal
5. Zee strand

**டென்மார்க்:**

1. Krokodille
2. Vinter
3. Telefon
4. Modersmål
5. Strand

**சுவீடன்:**

1. Krokodil
2. Vinter
3. Telefon
4. Modersmål
5. Strand

**பின்லாந்து:**

1. Krokotiili
2. Talvi
3. Puhelin
4. Äidinkieli
5. Merenranta

**தமிழ்:**

1. ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________
5. ____________________

(5 x 1 = 5 புள்ளிகள்)

**5. தரப்பட்டுள்ள வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. எமது உறவினர்களை நாம் எவ்வாறு அழைக்க வேண்டும்?

______________________________

______________________________

2. ஈழத்தின் வேறு பெயர்கள் இரண்டு எழுதுக.

______________________________

______________________________

3. எல்லாள மன்னனால் கட்டப்பட்ட குளம் எது?

______________________________

______________________________

4. தன்னலம் கருதாது பிறரின் நலனுக்காகத் தம்மையே கொடுப்பவர்கள் யாவர்?

______________________________

______________________________

5. ஏவற்சொல்லியம் ஒன்று எழுதுக.

______________________________

______________________________

6. வருகிறார்கள் என்ற சொல்லின் திணை, பால், எண், இடம் என்பவற்றை எழுதுக.

திணை: ______________ பால்: ______________

எண்: ______________ இடம்: ______________

7. தோன்றல், கெடுதல் புணர்ச்சிகளுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

தோன்றற் புணர்ச்சி: ______________

கெடுதற் புணர்ச்சி: ______________

(5 x 2 = 10 புள்ளிகள்)

**6. பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

மலையில் வந்து முகில்கள் கூட
வண்ண மயிலும் ஆடுது
அழகுத் தோகை விரித்து நின்றே
ஆனந்த மாய் ஆடுது
கோல மயிலின் கூத்தைக் கண்டு
குரங்கு தாளம் போடுது
கொப்புக் கொப்பாய்த் தாவிப் பாய்ந்து
குரங்கு தாளம் போடுது

- வித்துவான் க. வேந்தனார்

1. முகில்கள் கூடும்போது ஆடும் பறவை எது?

_______________________________________________

2. அது எதை விரித்து ஆடுகிறது?

_______________________________________________

3. முகில்கள் எங்கே கூடுகின்றன?

_______________________________________________

4. குரங்கு எதனைக் கண்டு தாளம் போடுகிறது?

_______________________________________________

5. அது எவ்வாறு தாளம் போடுகிறது?

_______________________________________________

(5 x 1 = 5 புள்ளிகள்)

**7. பின்வரும் தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 75 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. பாவேந்தர்
2. நாட்டார் பாடல்கள்
3. நான் செய்ய விரும்பும் தொழில்

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- விரும்பும் காரணம்
- தொழிலின் சிறப்பு
- பெறும் பயன்கள்

(15 புள்ளிகள்)

# பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

நல்லொழுக்கமானது மாந்தரது உயர் பண்பாகும். நல்லொழுக்கம் எனப்படுவது மாந்தரை நல்வழிப்படுத்தும் சிறந்த வழிமுறை ஆகும். மாந்தர் நல்லொழுக்கம் உடையவர்களாக வாழவேண்டும். ஒழுக்கப் பண்புகள் குழந்தையிலிருந்தே ஒருவருக்கு ஊட்டப்படுகின்றன. இப்பண்புகள் வளர்வதற்குப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பெரியவர்கள் உதவுகின்றார்கள். பெரியவர்களை மதித்தல், உண்மை பேசுதல், ஆசிரியர்களிடம் பணிவாக நடத்தல் போன்றவை ஒழுக்கப் பண்புகளுள் சிலவாகும். இவற்றை நாம் கடைப்பிடிக்க வேண்டும். திருக்குறளில் திருவள்ளுவர் ஒழுக்கமுடைமை என்னும் அதிகாரத்தில் ஒழுக்கத்தின் சிறப்புப் பற்றிக் கூறியுள்ளார். அதுமட்டுமன்றி நாலடியார், ஆத்திசூடி, மூதுரை, நல்வழி போன்ற அறநூல்களும் ஒழுக்கம் பற்றிக் கூறுகின்றன. எனவே, நாம் நல்ல ஒழுக்கங்களைக் கடைப்பிடித்துச் சிறந்தவர்களாக வாழ்வோம்.

1. மாந்தரது உயர் பண்பு எது?

   ______________________________

2. நாம் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கப் பண்புகள் இரண்டு எழுதுக.

   ______________________________

3. திருவள்ளுவர் ஒழுக்கத்தின் சிறப்புப் பற்றி எந்த அதிகாரத்தில் கூறியுள்ளார்?

   ______________________________

4. ஒழுக்கம் பற்றிக் கூறும் அறநூல்கள் இரண்டு எழுதுக.

   ______________________________

5. நாம் யாரிடம் பணிவாக நடந்துகொள்ள வேண்டும்?

   ______________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள குறிப்புகளை வாசித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

**பிறப்பு:**
03.12.1948

**பிறந்த இடம்:**
புத்தூர்,
யாழ்ப்பாண மாவட்டம்

**ஆற்றல்கள்:**
கவிஞர்,
தேர்ச்சிற்பக் கலைஞர்

**புனைபெயர்கள்:**
வியாசன், மாலிகா போன்ற புனைபெயர்களில் (வேறு பெயர்கள்) கவிதைகள் எழுதியுள்ளார்.



புதுவை இரத்தினதுரை புரட்சிப் பாடல்களை எழுதியுள்ளார்.

**கவிதைத் தொகுப்புகள்:**
வானம் சிவக்கிறது,
நினைவழியா நாட்கள்

1. கவிஞர் புதுவை இரத்தினதுரை புத்தூரில் பிறந்தார். (    )
2. இவர் ஓர் ஓவியக்கலைஞர். (    )
3. புதுவை இரத்தினதுரை அவர்களின் புனைபெயர்களுள் ஒன்று வியாசன். (    )
4. இவர் புரட்சிப் பாடல்களை எழுதியுள்ளார். (    )
5. வானம் சிவக்கிறது என்பது இவரின் கட்டுரைத்தொகுப்பு ஆகும். (    )

(5 X 1 = 5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 15 | | | |
| 2 | 09 | | | |
| 3 | 06 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| மொத்தப் புள்ளிகள் | | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |